INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY | DIGITAL SKILLS for LIFE

இணையத் தளங்களில் தொடர்புகொள்ளுதல்

# சமூக ஊடகம்




இதற்கான ஆதரவு:
DIGITAL FOR LIFE
PLAY IT FORWARD

# உள்ளடக்கம்


முகப்புரை 2

சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள் 3

சமூக ஊடக செயலிகள் பற்றிய விளக்கம் 4

வெவ்வேறு சமூக ஊடக செயலிகள் முழுவதிலும் உள்ள பொதுவான அம்சங்கள் 5

ஒரு சமூக ஊடக செயலியைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் 7

ஒரு Facebook கணக்கைப் பதிவு செய்யவும் 14

தனிப்பட்ட மற்றும் கணக்குத் தகவல்களை நிர்வகிக்கவும் 18

அமைப்புகள் மற்றும் தனியுரிமையை நிர்வகிக்கவும் 21

நண்பர்களைக் கண்டறிந்து சேர்க்கவும் 24

நண்பர் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவும் மற்றும் நிராகரிக்கவும் 26

ஒரு நண்பரை நீக்கவும் 27

ஒரு பதிவை உருவாக்கவும் 28

ஒரு பதிவுக்குக் கருத்தை உள்ளிடவும் அல்லது பதிவுக்கு விருப்பம் அளிக்கவும் 30

ஒரு பதிவைப் பகிரவும் 31


ஒரு பக்கத்தைத் தடுக்கவும் அல்லது புகாரளிக்கவும் 32

ஒரு சுயவிவரத்தைத் தடுக்கவும் அல்லது புகாரளிக்கவும் 33

உங்கள் டைம்லைனில் பதிவைப் பற்றி புகாரளிக்கவும் 34

ஒரு புகைப்படம் அல்லது காணொளியைப் பற்றி புகாரளிக்கவும் 35

கணக்கைச் செயலிழக்கச் செய்யவும் அல்லது நீக்கவும் 37

# முகப்புரை

இது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான மின்னிலக்கத் திறன்களைப் பற்றி மேலும் அறிந்து கொள்வதில் ஆர்வமாக இருக்கிற, ஏதேனும் மின்னிலக்க அனுபவம் உள்ள அல்லது அனுபவம் இல்லாத அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

வரைபடத்தில் காட்டியுள்ளபடி, இன்றியமையாத திறன்கள் 5 திறமை பிரிவுகளாக தொகுக்கப்பட்டுள்ளன.

**இணையவழித் தளங்களில் தொடர்புகொள்ளுதல் திறன் மூலம் பெறும் கற்றல் பயன்கள்:**

மின்னிலக்கத் தகவல்தொடர்புகளின் வெவ்வேறு பயன்முறைகளைப் பயன்படுத்தி எனது தொடர்புகள் அல்லது நிறுவனத்துடன் தொடர்பைத் துவங்க இயலும்.

DSL

கற்றல் பயனைப் பெறுவதில் உங்களுக்கு உதவுவதற்காக இந்த வழிகாட்டிப் புத்தகம், சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மற்றவர்களைத் தொடர்புகொள்வதில் உள்ள பொதுவான படிகளை எடுத்துக்காட்டுவதற்கு வெவ்வேறு சமூக ஊடக தளங்களை எடுத்துக்காட்டுகளாகப் பயன்படுத்துகிறது

இந்த வழிகாட்டி பொதுவான மென்பொருள் சின்னங்கள் மற்றும் மொபைல் சாதன அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டது. சில அம்சங்கள் மற்றும் பயனர் இடைமுகம் வெவ்வேறு கைப்பேசிகளின் வேறுபடக்கூடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

வாழ்க்கைக்கான மின்னிலக்கத் திறன்கள் (டி.எஸ்.எல்) கையேடு என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கிய சிறு புத்தகங்களின் தொகுதியாகும்:

- படிப்படியான வழிமுறைகள் மற்றும்
- விரைவான உதவிக் குறிப்புகள்

இணையத்தில் நம்பிக்கையுடனும் பாதுகாப்பாகவும் நீங்கள் உலாவுவதற்கு உதவுவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளன.





**இணையவழித் தளங்களில் பாதுகாப்பாக, விவேகமாக, கனிவாக இருத்தல்**
இணைய அச்சுறுத்தல்களுக்கு எதிராக பாதுகாப்பாக இருங்கள்; தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; இணையத்தில் நேர்மறையாக இருக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**தகவல்களை இணையவழித் தளங்களில் ஆராய்தல்**
இணையத்தில் தகவல்களைத் தேடவும், பார்க்கவும் மற்றும் மீட்டெடுக்கவும்.



**இணையவழித் தளங்களில் தொடர்புகொள்ளுதல்**
இணையத்தில் மற்றவர்களுடன் இணையவும்.



**இணையவழிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுதல்**
இணையத்தில் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளவும்.




**அறிவார்ந்த சாதனங்களை நிறுவி, பயன்படுத்துதல்**
உங்கள் மொபைல் சாதனத்தின் அடிப்படை வன்பொருள் மற்றும் மென்பொருள் செயல்பாடுகளை அமைத்து இயக்கவும்.





# சைபர் பாதுகாப்பு உதவிக்குறிப்புகள்

சமூக ஊடக செயலிகளைப் பயன்படுத்தும் போது பாதுகாப்பாக இருக்க, பின்வருவனவற்றைக் கடைபிடிக்கவும்:



அறியப்படாத ஆதாரங்களிலிருந்து வரும் சரிபார்க்கப்படாத இணைப்புகள் அல்லது இணைப்புக்கோப்புகளைத் திறக்கவோ பதிவிறக்கவோ **வேண்டாம்.**




தனிப்பட்ட அல்லது நிதி தொடர்பான விவரங்கள், கடவுச்சொற்கள் அல்லது ஒரு முறை கடவுச்சொல்லை (OTPஐ) யாருடனும் பகிர்ந்து கொள்ள **வேண்டாம்.**




நீங்கள் கோராத உரையாடல்களை அனுப்பும் அறியாத பயனர்களைத் **தடுத்துவிடவும்.**




**இரு காரணி அங்கீகாரத்தை (2FA) இயக்கவும்.**




அறியப்பட்ட பாதுகாப்புப் பாதிப்புகளில் இருந்து உங்கள் சாதனங்களைப் பாதுகாக்க, புதுப்பிப்புகளைச் சரிபார்த்து, **உங்கள் செயலியை உடனடியாகப் புதுப்பிக்கவும்**.




**அதிகாரப்பூர்வ** ஆதாரங்களில் இருந்து செயலிகளைப் பதிவிறக்கவும்.

# சமூக ஊடக செயலிகள் பற்றிய விளக்கம்


சமூக ஊடகம் என்பது இணைய தளங்கள் மற்றும் வலைத்தளங்களைக் குறிக்கிறது, இது பயனர்கள் தங்களின் உள்ளடக்கத்தை உருவாக்க மற்றும் பகிர, மற்றவர்களுடன் இணைய மற்றும் பல்வேறு வகையான தகவல்தொடர்புகளில் ஈடுபட அனுமதிக்கிறது. இது தனிப்பட்ட மற்றும் தொழில்முறை நோக்கங்களுக்காகச் சேவை செய்யும் நவீன தகவல்தொடர்புகளின் இன்றியமையாத அங்கமாக மாறியுள்ளது.

தொலைபேசி அழைப்புகள் அல்லது கடிதங்கள் போன்ற பாரம்பரிய தகவல்தொடர்பு வடிவங்களைப் போலல்லாமல், சமூக ஊடகங்கள் உடனடி மற்றும் அதிக அளவிலான தொடர்புகளைச் செயல்படுத்துகிறது, பெரும்பாலும் உலகம் முழுவதும் அதிக அளவிலான பார்வையாளர்களைச் சென்றடைகிறது. இது தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களுக்கு இடையேயான தொடர்புகள் மற்றும் உறவுகளை வளர்க்கவும், நிகழ்நேரத்தில் கருத்துக்கள், தகவல் மற்றும் ஊடக உள்ளடக்கத்தை பரிமாறிக்கொள்ளவும் உதவுகிறது.

பிரபலமான சமூக ஊடக தளங்களில் Facebook, Instagram மற்றும் TikTok ஆகியவை அடங்கும்.

### செயலியைக் கற்றுக்கொள்வதற்கு முன் கற்பவர்கள் கட்டாயம் தெரிந்து கொள்ளவேண்டியவை:

- ஒரு மொபைல் சாதனத்தை (iOS அல்லது Android) செல்லுலார் நெட்வொர்க்குடனோ அல்லது வேலை செய்யும் கேமராவுடன் உள்ள Wi-Fi உடனோ இணைக்கவும்.
- மொபைல் சாதனத்தில் செயலியை எவ்வாறு நிறுவுவது என்பதை அறிந்துகொள்ளவும்.




**Facebook**





**Instagram**

# வெவ்வேறு சமூக ஊடக செயலிகள் முழுவதிலும் உள்ள பொதுவான அம்சங்கள்

**Facebook** | **Instagram**




**முகப்பு சின்னம்**
மீண்டும் செயலியின் முகப்புப் பக்கத்திற்குச் செல்.







**பதிவு சின்னம்**
ஒரு பதிவை உருவாக்க இந்த சின்னங்கள் மீது தட்டவும்.





**விருப்ப சின்னம்**
பதிவை விரும்புவதற்கு "தம்ஸ்-அப்" அல்லது "ஹார்ட்" சின்னம் மீது தட்டவும்.


# வெவ்வேறு சமூக ஊடக செயலிகள் முழுவதிலும் உள்ள பொதுவான அம்சங்கள்


| Facebook | Instagram | |
|---|---|---|
|   |  | **கருத்து சின்னம்**<br>ஒரு பதிவில் உங்கள் கருத்துகளை உள்ளிட இந்த சின்னங்கள் மீது தட்டவும். |
|   |   | **ஒரு ஸ்டோரி சின்னத்தை உருவாக்கவும் அல்லது காணவும்**<br>24 மணிநேரத்திற்குள் காலாவதியாகும் 'ஸ்டோரி' எனப்படும் சிறிய காணொளிகளை உருவாக்கிக் காணவும். |
|     |   | **நண்பர் சின்னத்தைப் பின்தொடரவும் அல்லது சேர்க்கவும்**<br>ஒரு பக்கத்தைப் பின்தொடர அல்லது ஒரு நண்பரைச் சேர்த்து அவர்களின் வழங்கலைக் காண இந்த சின்னங்கள் மீது தட்டவும். |

# ஒரு சமூக ஊடக செயலியைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு பதிவை உருவாக்கவும்


**1** உரை, ஒரு புகைப்படம், ஒரு காணொளி அல்லது பிற மீடியா கோப்புகளைச் செருகி ஒரு பதிவை உருவாக்கவும்.


## Facebook




## Instagram








# ஒரு சமூக ஊடக செயலியைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு பதிவை உருவாக்கவும்


**2** Facebook-இல் பதிவிட, "பதிவு" என்பதைத் தட்டவும், பின்னர் "ஆம், Instagramஇல் பகிரவும்" அல்லது "இல்லை, Facebookக்கு மட்டும் பகிரவும்" என்பதைத் தேர்ந்தெடுக்கவும். Instagram -இல், உங்கள் பதிவை வெளியிட, "Next" என்பதைத் தட்டவும், பின்னர் "Share" என்பதைத் தட்டவும்.


## Facebook




## Instagram




# ஒரு சமூக ஊடக செயலியைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு பதிவுக்கு விருப்பம் அளிக்கவும்

**ஒரு பதிவை விரும்ப [விரும்புக] அல்லது [♡] சின்னம் மீது தட்டவும்.**

## Facebook





## Instagram




# ஒரு சமூக ஊடக செயலியைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு பதிவில் கருத்தை உள்ளிடவும்


கருத்திடுக அல்லது சின்னம் மீது தட்டி, உங்கள் கருத்தை உள்ளீடு செய்து, அல்லது மீது தட்டவும்.


## Facebook




## Instagram





# ஒரு சமூக ஊடக செயலியைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு கதையைக் காணவும்

**உங்கள் வழங்கலில் கதைகளைக் காண முகப்புப் பக்கத்தின் மேலே உள்ள ஸ்டோரி சின்னம் மீது தட்டவும்.**

## Facebook





## Instagram




# ஒரு சமூக ஊடக செயலியைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு ஸ்டோரியை உருவாக்கவும்

முகப்புப் பக்கத்தின் மேல் இடது மூலையில் உள்ள [+] சின்னம் மீது தட்டவும். உங்களுக்கு விருப்பமான மீடியா கோப்பைத் தேர்ந்தெடுத்து, [பகிர்] அல்லது [Your story] மீது தட்டவும்.

## Facebook





## Instagram




# ஒரு சமூக ஊடக செயலியைப் பயன்படுத்துவதற்கான பொதுவான படிகள் - ஒரு நண்பரைச் சேர்க்கவும் அல்லது நண்பரைப் பின்தொடரவும்

**ஒருவரைச் சேர்க்க அல்லது பின்தொடர அவரது சுயவிவரப் பக்கத்தில் உள்ள "சேர்" அல்லது "Follow" என்ற சின்னம் மீது தட்டவும்.**

## Facebook





## Instagram




# ஒரு Facebook கணக்கைப் பதிவு செய்யவும்


**1** புதிய கணக்கை உருவாக்கு என்பதன் மீது தட்டவும்





**2** தொடங்குக என்பதைத் தேர்ந்தெடுக்கவும்





**3** உங்கள் பெயரை உள்ளிடவும்




## 4 உங்கள் பிறந்த தேதியை அமைக்கவும்




## 5 உங்கள் பாலினத்தைத் தேர்வுசெய்யவும்




## 6 மொபைல் எண் அல்லது மின்னஞ்சல் முகவரி மூலம் பதிவு செய்யவும்



## 7 ஒரு கடவுச்சொல்லை உருவாக்கவும்

←

**கடவுச்சொல்லை உருவாக்கவும்**

குறைந்தபட்சம் 6 எழுத்துகள் அல்லது எண்களைக் கொண்ட கடவுச்சொல்லை உருவாக்கவும். அது மற்றவர்கள் யூகிக்க முடியாததாக இருக்க வேண்டும்.

கடவுச்சொல்
••••••••••••••••••

அடுத்து

## 8 உங்களின் உள்நுழைவுத் தகவல்களைச் சேமிக்கவும்

←

**உங்களின் உள்நுழைவுத் தகவலைச் சேமிக்கவா?**

LD IMDA அவர்களுக்கான உள்நுழைவுத் தகவலைச் சேமிப்போம். இதன் மூலம் அடுத்த முறை உள்நுழையும்போது, அதை உள்ளிட வேண்டியதில்லை.

சேமித்திடுக

இப்போது வேண்டாம்

## 9 விதிமுறைகள் மற்றும் கொள்கைகளை ஏற்கவும்

←

**Facebook இன் விதிமுறைகள் மற்றும் கொள்கைகளை ஏற்கவும்**

எங்கள் சேவையைப் பயன்படுத்துபவர்கள் உங்கள் தொடர்புத் தகவல்களை Facebook இல் பதிவேற்றி இருக்கக்கூடும். மேலும் அறிக.


**ஏற்கிறேன்** என்பதைத் தட்டுவதன் மூலம், கணக்கை உருவாக்கவும் Facebook இன் விதிமுறைகள், தனியுரிமைக் கொள்கை, குக்கீகள் கொள்கையை ஆகியவற்றையும் ஏற்கிறீர்கள்.

கணக்கை உருவாக்கும்போது நாங்கள் சேகரிக்கும் தகவல்களை எத்தகைய முறையில் பயன்படுத்துகிறோம் என்பதை தனியுரிமைக் கொள்கை விளக்குகிறது. எடுத்துக்காட்டாக, விளம்பரங்கள் உட்பட எங்கள் தயாரிப்புகளை வழங்கவும் பிரத்தியேகமாக்கவும் மேம்படுத்தவும் இந்தத் தகவல்களைப் பயன்படுத்துவோம்.

ஏற்கிறேன்

# குறிப்புகள்

## 10 உங்கள் கணக்கைச் சரிபார்க்கவும்





உங்கள் தொலைபேசி எண்ணுக்கு அனுப்பப்பட்ட குறியீட்டை உள்ளிட்டு அல்லது உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சலில் உள்ள சரிபார்ப்பு இணைப்பைக் கிளிக் செய்து உங்கள் கணக்கைச் சரிபார்க்கவும்.


# தனிப்பட்ட மற்றும் கணக்குத் தகவல்களை நிர்வகிக்கவும்




**1** சுயவிவர சின்னம் மீது தட்டவும்





**2** சுயவிவரத்தைத் திருத்து என்பதைத் தேர்ந்தெடுக்கவும்





**3** சுயவிவரப் படத்தை மாற்றவும்




## 4 அட்டைப் படத்தை மாற்றவும்




## 5 உங்களைப் பற்றிய தகவல்களைச் சுருக்கமாகச் சேர்க்கவும்





## 6 தனிப்பட்ட விவரங்களைத் திருத்தவும்



# குறிப்புகள்

7


## உங்களைப் பற்றிய தகவல்களைத் திருத்தவும்





உங்களைப் பற்றிய பிற தனிப்பட்ட தகவல்களைப் புதுப்பிக்க, **"எனது அறிமுகம் தொடர்பானது"** என்பதன் மீது தட்டவும்.

# அமைப்புகள் மற்றும் தனியுரிமையை நிர்வகிக்கவும்


**1** மெனு சின்னம் மீது தட்டவும்




**2** அமைப்புகள் & தனியுரிமை என்பதன் மீது தட்டவும்





**3** அமைப்புகள் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்




# அமைப்புகள் மற்றும் தனியுரிமையை நிர்வகிக்கவும்

## 1 உங்கள் விருப்புத்தேர்வுகளைச் சரிப்படுத்தவும்





உங்கள் Facebook-இன் அமைப்புகளையும் முன்னுரிமைகளையும் சரிசெய்ய ஒவ்வொரு தாவலின் மீது தட்டவும்.

## 2 பார்வையாளர்கள் மற்றும் தெரிவுநிலை என்பதை அமைக்கவும்




உங்கள் சுயவிவரத்தையும் பதிவுகளையும் யாரெல்லாம் பார்க்கலாம் என்பதைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு தாவலின் மீது தட்டவும்.


## 3 சாதன அனுமதிகள் என்பதை மாற்றவும்





உங்கள் சாதனத்தின் அனுமதி அமைப்புகளைச் சரிசெய்ய, **"சாதன அனுமதிகள்"** என்பதன் மீது தட்டவும்.

# அமைப்புகள் மற்றும் தனியுரிமையை நிர்வகிக்கவும்

## 1 அமைப்புகள் என்பதன் மீது தட்டவும்




## 2 தனியுரிமை சரிபார்ப்பு என்பதன் மீது தட்டவும்





## 3 உங்கள் தனியுரிமை அமைப்புகளைச் சரிசெய்யவும்





ஒவ்வொரு விருப்பத்தேர்வையும் தட்டி, உங்கள் தனியுரிமை அமைப்புகளை அதற்கு ஏற்றவாறு சரிசெய்ய பின்வரும் படிகளைப் பின்பற்றவும்.

# நண்பர்களைக் கண்டறிந்து சேர்க்கவும்

## 1 தேடல் சின்னம் என்பதன் மீது தட்டவும்





## 2 ஒரு நண்பரைத் தேடவும்




தேடல் பட்டியில் ஒரு பெயரை உள்ளிட்டு, கீழே உள்ள தேடல் புலத்தில் உள்ள பெயரின் மீது தட்டவும்.

## 3 சேர் என்பதன் மீது தட்டவும்





ஒரு நண்பர் கோரிக்கையை அனுப்ப **"சேர்"** என்பதன் மீது தட்டவும்.

## 4 அனைவரையும் காட்டு என்பதன் மீது தட்டவும்




உங்கள் சுயவிவரப் பக்கத்தில் **"அனைவரையும் காட்டு"** என்பதன் மீது தட்டவும்.


## 5 உங்கள் புதிய நண்பரைக் காணவும்





உங்கள் நண்பர் கோரிக்கை ஏற்கப்பட்டால், இந்தப் பக்கத்தில் உங்கள் புதிய நண்பர் காட்டப்படுவார்.

# நண்பர் கோரிக்கைகளை ஏற்கவும் மற்றும் நிராகரிக்கவும்

**1** முகப்புப் பக்கத்தில் நண்பர்கள் என்ற சின்னம் மீது தட்டவும்





**2** நண்பர் கோரிக்கையை ஏற்கவும்




எந்தவொரு நண்பர் கோரிக்கையையும் ஏற்க **"சரி"** என்ற பொத்தானைக் கிளிக் செய்யவும்.

**3** நண்பர் கோரிக்கையை நிராகரிக்கவும்




எந்தவொரு நண்பர் கோரிக்கையையும் நிராகரிக்க **"நீக்குக"** என்ற பொத்தானைக் கிளிக் செய்யவும்.


# ஒரு நண்பரை நீக்கவும்

**1** உங்கள் நண்பரின் சுயவிவரப் பக்கத்தை அணுகவும்





இந்த நபரை நண்பர் பட்டியலில் இருந்து நீக்க **"நண்பர்கள்"** பொத்தான் மீது தட்டவும்.

**2** உறுதிப்படுத்த, 'நண்பரல்ல என்று மாற்று' என்பதன் மீது தட்டவும்



# ஒரு பதிவை உருவாக்கவும்

## 1 உங்கள் மனதில் என்ன உள்ளது? என்பதன் மீது தட்டவும்





## 2 ஒரு பதிவை உருவாக்கவும்





- **A** உரையை இங்கே உள்ளிடவும்
- **B** ஒரு புகைப்படம் அல்லது காணொளியை இணைக்கவும்
- **C** ஒரு நபரைக் குறியிடவும்
- **D** உங்கள் தற்போதைய உணர்வுகள் அல்லது செயல்பாடுகளைச் செருகவும்
- **E** உங்கள் இருப்பிடத்தைச் சேர்க்கவும்
- **F** ஒரு நேரடி காணொளியைத் தொடங்கவும்
- **G** உங்கள் பதிவின் பின்னணி நிறத்தைத் திருத்தவும்
- **H** ஒரு புகைப்படம் அல்லது காணொளியை எடுக்கவும்
- **I** ஒரு GIF-ஐச் செருகவும்
- **J** உங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு முக்கியமான தருணத்தைப் பகிர்ந்து கொள்ளவும்
- **K** ஒரு இசைக் கோப்பைப் பகிரவும்


**3** உங்கள் வரைவைப் பதிவிட பதிவு என்பதன் மீது தட்டவும்




**4** வரைவைப் பதிவிடாமல் சேமிக்க, ← மீது தட்டவும்




**5** வரைவாகச் சேமிப்பதை உறுதிப்படுத்தவும்




# ஒரு பதிவுக்குக் கருத்தை உள்ளிடவும் அல்லது பதிவுக்கு விருப்பம் அளிக்கவும்



**1** கருத்திடுக என்பதன் மீது தட்டவும்.




**2** ஒரு கருத்தை பதிவிடவும்





உரைப்பெட்டியில் கருத்தை உள்ளீடு செய்து, பதிவிட ➤ மீது தட்டவும்.

**3** ஒரு பதிவுக்கு விருப்பம் அளிக்கவும்




# ஒரு பதிவைப் பகிரவும்

**1** பகிர்க என்பதன் மீது தட்டவும்





**2** வழங்கலிலோ அல்லது நண்பருடனோ பதிவைப் பகிரவும்




உங்கள் வழங்கலில் பதிவைப் பகிர **"இப்போது பகிர்க"** என்பதன் மீது தட்டவும் அல்லது தனிப்பட்ட முறையில் பகிர ஒரு நண்பரின் பெயரின் மீது தட்டவும்.

**3** ஒரு நண்பருடன் பதிவைப் பகிர்வதை உறுதிப்படுத்த அனுப்பு என்பதைத் தட்டவும்




நண்பருடன் பகிர **"அனுப்புக"** என்பதன் மீது தட்டவும். (இந்தச் செயல்பாட்டிற்கு மெசஞ்சர் செயலி தேவை.)

# ஒரு பக்கத்தைத் தடுக்கவும் அல்லது புகாரளிக்கவும்



## 1 மெனு சின்னம் மீது தட்டவும்





## 2 பக்கத்தைத் தடுக்கவும் அல்லது புகாரளிக்கவும்




பக்கத்தைத் தடுக்க **"தடை செய்க"** என்பதன் மீது தட்டவும். பக்கத்தைப் புகாரளிக்க **"சுயவிவரத்தைப் புகாரளி"** என்பதன் மீது தட்டவும்.

## 3 பக்கத்தைப் புகாரளிக்கவும்




பக்கத்தைப் புகாரளிப்பதை உறுதிசெய்வதற்கான, சிக்கலைச் சிறப்பாக விவரிக்கும் விருப்பத் தேர்வைத் தேர்ந்தெடுக்கவும்.

# ஒரு சுயவிவரத்தைத் தடுக்கவும் அல்லது புகாரளிக்கவும்

## 1 மெனு சின்னம் மீது தட்டவும்





## 2 சுயவிவரத்தைத் தடுக்கவும் அல்லது புகாரளிக்கவும்




சுயவிவரத்தைத் தடுக்க **"தடை செய்க"** என்பதன் மீது தட்டவும். சுயவிவரத்தைப் புகாரளிக்க **"சுயவிவரத்தைப் புகாரளி"** என்பதன் மீது தட்டவும்.


## 3 சுயவிவரத்தைப் புகாரளிக்கவும்





சுயவிவரத்தைப் புகாரளிப்பதை உறுதிசெய்வதற்கான, சிக்கலைச் சிறப்பாக விவரிக்கும் விருப்பத்தேர்வைத் தேர்ந்தெடுக்கவும்.

# உங்கள் டைம்லைனில் பதிவைப் பற்றி புகாரளிக்கவும்


## 1 மெனு சின்னம் மீது தட்டவும்




## 2 பதிவைப் புகாரளிக்கவும்




## 3 ஒரு சிக்கலைத் தேர்ந்தெடுக்கவும்




பதிவைப் புகாரளிப்பதை உறுதிசெய்வதற்கான சிக்கலைச் சிறப்பாக விவரிக்கும் விருப்பத்தேர்வைத் தேர்ந்தெடுக்கவும்.


உங்கள் டைம்லைனில் பதிவைப் பற்றி புகாரளிக்கவும்

# ஒரு புகைப்படம் அல்லது காணொளியைப் பற்றி புகாரளிக்கவும்


**1** புகைப்படம் அல்லது காணொளியின் மீது தட்டவும்





**2** மெனு சின்னம் மீது தட்டவும்




**3** புகைப்படம் அல்லது காணொளியைப் பற்றி புகாரளிக்கவும்




## 4 ஒரு சிக்கலைத் தேர்ந்தெடுக்கவும்





- ஒரு புகைப்படத்தைப் புகாரளிக்க **"புகைப்படத்தைப் புகாரளி"** என்பதைத் தட்டவும் அல்லது காணொளியைப் புகாரளிக்க **"காணொளியைப் புகாரளி"** என்பதைத் தட்டவும்.
- புகைப்படம் அல்லது காணொளியைப் புகாரளிப்பதை உறுதிப்படுத்த, சிக்கலைச் சிறப்பாக விவரிக்கும் விருப்பத்தேர்வைத் தேர்ந்தெடுக்கவும்.

# கணக்கைச் செயலிழக்கச் செய்யவும் அல்லது நீக்கவும்


**1** மெனு சின்னம் மீது தட்டவும்





**2** அமைப்புகள் & தனியுரிமை என்பதன் மீது தட்டவும்




**3** அமைப்புகள் மீது தட்டவும்




## 4 கணக்குகள் மையத்தில் மேலும் காண்க என்பதன் மீது தட்டவும்





## 5 தனிப்பட்ட விவரங்கள் என்பதன் மீது தட்டவும்





## 6 கணக்கு உரிமை மற்றும் கட்டுப்பாடு என்பதன் மீது தட்டவும்



## 7 முடக்குதல் அல்லது நீக்குதல் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்





## 8 கணக்கைச் செயலிழக்கச் செய்யவும்




"**கணக்கை முடக்கவும்**" என்பதைத் தேர்ந்தெடுத்து, உங்கள் கணக்கை தற்காலிகமாகச் செயலிழக்கச் செய்ய "**தொடர்க**" என்பதன் மீது தட்டவும்.

## 9 கணக்கை நீக்கவும்




மாறாக, உங்கள் கணக்கை நிரந்தரமாக நீக்க, "**கணக்கை நீக்கவும்**" என்பதைத் தேர்ந்தெடுத்து, "**தொடர்க**" என்பதன் மீது தட்டவும்.

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

**கூடுதல் தகவலுக்கு மற்றும் உங்கள் அருகிலுள்ள சிங்கப்பூர் மின்னிலக்க சமூக நடுவத்தைக் கண்டறிய:**

**IMDA தொடர்பு மையம்**

**ஹாட்லைன்:** +65 6377 3800
**மின்னஞ்சல்:** info@imda.gov.sg
**இணையத்தளம்:**
digitalforlife.gov.sg

© 2024 தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆதாரத்தின் எந்தப் பகுதியையும் IMDA வின் வெளிப்படையான ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்தவோ நகலெடுக்கவோ கூடாது. இந்த வழிகாட்டியுடன் தொடர்புடைய ஆவணங்களின் பதிப்புரிமை பாதுகாப்பிற்கு உட்பட்டதாக இருக்கலாம். இவற்றுள் பின்வருபவையும் அடங்கும்: ஆவணங்கள், ஸ்லைடுகள், படங்கள், ஒலி மற்றும் காணொளி. காப்புரிமை பெற்ற பொருட்களை அங்கீகாரம் இல்லாமல் வைத்திருப்பது, நகல் எடுப்பது, விநியோகம் செய்வது அல்லது மாற்றியமைப்பது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த ஆதாரவளங்கள் Meta-இன் இயங்குதளங்களில் பொதுவாகக் கிடைக்கும் உள்ளடக்கத்திலிருந்து சான்றுகளைப் பெறுகிறது.